பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 14 வியாழக்கிழமை (27-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 180

## தென்மாகாணம், வடமேல் மாகாணம்

# இரு முதலமைச்சர்களுக்கு இடை நிறுத்த உத்தரவு!

## ஆளுநர்களுக்கும் நோட்டீஸ்

கொழும்பு, மே 27

தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்ட புதிய முதலமைச்சர்கள் பணி புரிவதை இடைநிறுத்துமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இந்த இரண்டு மாகாணங்களிலும் பொது மக்கள் முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன கூட்டாக இயங்கவுள்ளதாக அறிவித்திருந்த போதிலும் ஆளுநர்கள் ஐ. தே. க. முதலமைச்சர்களை அவசர அவசரமாக நியமித்திருந்தது தெரிந்ததே.

இந்த நியமனங்களுக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் வெள்ள அகதிகள்

கொழும்பு, மே 27

கொழும்பில் நேற்றுப் பெய்த பெரும் மழை காரணமாக, தாழ்ந்த பிரதேசங்களில் வசித்து வந்த ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து அகதிகளாகினர்.

கொழும்பில் நேற்றுக் காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் 106 7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. (இ-க)

## தெரிவுக்குழு கூட்டத்துக்கு வருமாறு

# தமிழ்க் கட்சிகளுக்கு மங்கள அழைப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு, குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இப்படி கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஒன்றை நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலம் முன்வைப்பதற்கு தேவையான முயற்சியில் திரு முனசிங்கா மீண்டும் இறங்கியுள்ளார் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை ஆட்சேபிக்குமுகமாக தமிழ்க் கட்சிகள் தெரிவுக் குழுவின் அமர்வுகளைப் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே. (இ-எ)

## மணலாறில் சிப்பாய் பலி

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் தமது முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கினர். அப்போது ஒரு சிப்பாய் உயிரிழந்தார்; 3 படையினர் காயமடைந்தனர்.

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. (இ-எ 5-6)

## 2 தேசத் துரோகிகள் கொல்லப்பட்டனர்

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 27

வவுனியா மாவட்டம் பம்பைமடுவில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தேசத் துரோகிகள் இருவர் கொல்லப்பட்டனர். என்று அறிவிக்கப்பட்டது. அவர்களிடமிருந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

பம்பைமடுவில் உள்ள கல்வெட்டு என்னும் இடத்தில் நேற்றுக்காலை 7 மணியளவில் பொதுமக்கள் சிலரைப் பிடித்துக்கொண்டு வந்த ரெலோ தேசத் துரோகிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே இத்திடீர் மோதல் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட இரு தேசத்துரோகிகளின் உடல்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். அவர்களால் கைது செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட பொதுமக்கள் தப்பி ஓடிவிட்டனர்.

தேசத் துரோகிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

ஜி 3 ஏ 3 துப்பாக்கி - 01

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் சலாடின் வாகனம் சேதம்

வவுனியாமாவட்டம் பம்பைமடுவில் நேற்று முற்பகல் 10 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே சுமார் அரை மணி நேரம் சண்டை இடம்பெற்றது.

நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இரு தேசத் துரோகிகள் கொல்லப்பட்ட இடத்தை துப்புரவு செய்வதற்காக நான்கு சலாடின் வாகனங்களுடனும், இரண்டு கவச வாகனங்களுடனும் வந்த சுமார் 150க்கு மேற்பட்ட இராணுவத்தினருடனேயே இம்மோதல் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இராணுவத்தினரின் 'சலாடின்' வாகனம் ஒன்றும் சேதமடைந்தது.

பின்வாங்கிய படையினர் அதை கட்டி இழுத்துச் சென்றனர். (இ-5)

## விடுதலைப் புலிகள் விவகாரம்

# இரு நாட்டு ராணுவங்களால் இயலாததை தமிழகப் பொலிசார் சாதித்துள்ளனர்

### சவானுக்கு எழுதிய கடிதத்தில் ஜெயலலிதா பெருமிதம்

சென்னை, மே 27

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் மற்றும் சமுதாய அமைப்புகளில் இருந்து விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தை முற்றிலும் நீக்குவதற்கு தாம் உறுதி கொண்டிருப்பதாக தமிழக முதலமைசச்ர்மச்செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இதில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப் புலிகளை ஒடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்துள்ளது.

இந்த இயக்கத்துடன் நான் இரகசிய உடன்பாடு செய்து கொண்டிருப்பதாக சில அரசியல் வாதிகள் கூறுவது வேடிக்கையானதாகும்,

இலங்கையில் பல மாதங்கள் தங்கியிருந்த இந்திய அமைதி காக்கும் படையினரால் — இலங்கை இராணுவத்தினரின் உதவி இருந்தும் கூட — விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒழித்து விட

[ 6 ஆம் பக்கம்பார்க்க ]

## விசாரணை நேற்று ஆரம்பம்

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளைப் பலி கொண்ட அராலித்துறை கண்ணி வெடிச் சம்பவம் தொடர்பான ஆணைக்குழு விசாரணை கொழும்பு பண்டார நாயக்கா ஞா.பகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் மெர்வின் விஜேசேகர ஆணைக்குழுவினருக்கும் சாட்சிகளுக்கும் இணைப்பாளராகக் கடமை ஆற்றுகிறார். (இ-5-6)

# ஆசிரியர் சேவைக்குரிய கட்டுப்பாடுகள் பல நீக்கம்

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, மே 27

ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிக்கும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆலோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் படி, ஆசிரியருக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் அவர்களின் சேவைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன.

ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பாக அமச்சரவை ஏற்றுக் கொண்ட மற்றும் விடயங்கள் வருமாறு;-

★ பாடசாலையில், மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் சேவையாற்ற வேண்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை என்று கூறி தமிழரின் வீடுகள் சூறை

## கொழும்பில் பரவலாக நடக்கிறது

கொழும்பு, மே 27

கொழும்பில் பல பகுதிகளிலும் தமிழர்களின் வீடுகளில் சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு தங்க நகைகள், பணம் ஆகியவற்றை அபகரிக்கும் செயல்கள் பரவலாக இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் படுகொலைகளை அடுத்து இவ்வாறான சம்பவங்கள் மேலும் அதிகரித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழர்கள் பலர் பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மோசடிகளில் ஈடுபடும் விஷமிகள் குறித்து விழிப்புடன் செயற்படுமாறு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார். (ஓ-எ)

## உதவி வைத்தியர்களுக்கு சம்பளம்-அலவன்ஸ் மாற்றம்

கொழும்பு, மே 27

உதவி மருத்துவ அதிகாரிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் சம்பளத்தையும் அலவன்ஸ் தொகையையும் மாற்றி அமைப்பது தொடர்பாக சம்பள ஊழியர் கோப்புக் குழு தெரிவித்த சிபார்சை அமைச்சரவை நேற்று ஏற்றுக் கொண்டது.

மாற்றி அமைக்கப்பட்ட சம்பள விகிதம் 1988 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செல்லுபடியானதாக இருக்கும்.

நிலுவைப் பணம் 1992 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படும்.

ஓய்வூதியத்துக்கு கணக்கு எடுக்கப்படாத அலவன்ஸ் தொகை 1992 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செல்லுபடியானதாக இருக்கும். நிலுவைப் பணமும் அன்றைய தினத்தில் இருந்து வழங்கப்படும். (இ-எ)

### உதவி செய்வதாக நடித்து

## 'பனடோல்' வாங்க சென்றவர் சைக்கிளுடன் மாயம்!

### கோப்பாய்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 27

தலையிடியில் படுத்திருந்தவருக்கு ''பனடோல்'' வாங்கிவருவதாக அவரின் சைக்கிளை வாங்கிச் சென்றவர் சைக்கிளுடன் மாயமாக மறைந்து விட்டார்.

நேற்று முன்தினம் கோப்பாய்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இது பற்றித் தெரிய வருவதாவது;

சம்பவதினம் கோப்பாய் பிரதான வீதியில் கூட்டுறவுச் சங்கக் கிளைக்குப் பொருள்கள் வாங்கச் சென்றவர் தலையிடி மற்றும் காய்ச்சல் காரணமாக அங்கு ஓரிடத்தில் சரிந்து படுத்திருந்தார்.

அச்சமயம் அவ்விடத்திற்கு வந்த ஒருவர் அவரை அணுகி உடல் நலன் குறித்து விசாரித்துவிட்டு தான் ''பனடோல்'' வங்கிவருவதாகக் கூறினாராம்.

''பனடோல்'' வாங்கி வருவதற்காக சுகயீனமாகப் படுத்திருந்தவரின் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட அந்த நபர், திரும்பி வரவேயில்லை. அவர் சைக்கிளுடன் ''சம்பி நீட்டி'' விட்ட விடயம் பின்னர் தெரிய வந்தது (ஓ-15)


## புளொக் தயாரிப்பாளர்

புளொக் தயாரிப்பதில் தேர்ச்சியும், அனுபவமும் உள்ளவர்கள் தேவை. சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்)
உதயன்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ். மாவட்ட
சி. க. கூ. ச. சமாசம்

## பதவி வெற்றிடம்

பதவி: வெளிக்கள உத்தியோகத்தர்

கல்வித் தகைமை:
க. பொ. த. (உ த) பரீட்சை சித்தி

சம்பள அளவு: 730-20 10 25 5 - 1055.00
ரூபா 1160/- படியுடன் பிரயாணப்படி
ரூபா 500/- வழங்கப்படும்.

வயது: 18 தொடக்கம் 40 வரை

விண்ணப்ப முடிவு : திகதி 15-06-93

கோப்பாய் பிராந்தியத்திலுள்ள அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களைச் சமாசக் காரியாலயத்தில் பெற்று, அங்கத்துவ சங்கங்களினூடாக விண்ணப்பிக்கவும்.

வ. விக்னேஸ்வரன்
பதில் மாவட்டச் செயலாளர்
யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்

182¼, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/5167)


## சப்ரகமுவ முதல் அமைச்சர்

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜி. வி. கீர்த்தி நிலம சப்ரகமுவ மாகாணத்தின் முதல் அமைச்சரானார். அவர் ஆளுநர் நோயெல் விமலசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## பிரேமாவின் செயலருக்கு புதிய பதவி

கொழும்பு, மே 27

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பத்திரிகைச் செயலாளராகப் பணிபுரிந்த இவான்ஸ் கூரே பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தகவல் அதிகாரியாகப் பதவி ஏற்றிருக்கிறார்.

பிரேமதாஸா படுகொலையை அடுத்து அவர் வெளியுறவு அமைச்சில் பிரசாரப் பிரிவுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் ஒரு வாரத்துக் கிடையில் இப்பதவியை ஏற்காமலேயே அவர் லண்டன் பயணமானார்.

## இருநாள் நாடக கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 27

நாடகத்தினதும் அரங்கினதும் கல்வியியல் முக்கியத்துவம் பற்றியதோர் கருத்தரங்கு நாளை 28ஆம் திகதியும் மறுதினம் 29ஆம் திகதியும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

நாளை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் மறுநாள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் நடைபெறும். இக் கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஒழுங்கு செய்துள்ளது.

அரங்கினைப் பயிற்றும் ஆசிரியர்களுக்கும் க. பொ. த. (உ த) மாணவர்களுக்கும் பட்டதாரி வகுப்பு மாணவர்களுக்கும் பயனுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

### மாகாண சபைகளில்

## இ. தொ. கா. உறுப்பினர்கள் மூவருக்கு அமைச்சர் பதவி

கொழும்பு, மே 27

ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவா மாகாண சபைகளில் இ. தொ. கா. உறுப்பினர்கள் மூவர் அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

இம் மூவரின் பெயர்களையும் இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் நேற்று வெளியிட இருந்தார்.

இதற்கிடையில் ஊவா மாகாண முதலமைச்சர் பதவி ஏற்பு இன்று வியாழன் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### மாதம் ஒரு தடைவை

## எம். பிக்களை தனித்தனியாக ஜனாதிபதி சந்திக்க ஏற்பாடு

மாதம் ஒரு தடவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அறிவித்திருக்கிறார்.

இச் சந்திப்பு, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் சமயம் நாடாளுமன்றக்கட்டடத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## வீரப்பன் - விடுதலை புலிகள் தொடர்புக்கு வாய்ப்பில்லை

### கர்நாடக உயரதிகாரி கருத்து

சென்னை, மே 27

சந்தனக் கடத்தல் கொள்ளைக்காரன் வீரப்பன் கும்பல் நடத்தும் தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள், நக்சலைட்டுகள் போன்ற தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

கர்நாடக காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு. எஸ். என். எஸ் மூர்த்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார். [இ-க]

## பரீட்சைக்கு கொழும்புசெல்ல கப்பல் வசதி

யாழ்ப்பாணம். மே 27

பொது எழுது வினைஞர் சேவையில் அதிசிறப்பு வகுப்புக்கு (மூப்பு அடிப்படையில்) பதவி உயர்வு பெறுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்திலுள்ள பரீட்சார்த்திகள் கொழும்பு சென்று பரீட்சை எழுதுவதற்கு கப்பல் ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

இதற்கு ஏதுவாக இவர்கள் அனைவரையும் உடனடியாக யாழ். செயலக பரிபாலனக் கிளையில் தங்கள் பெயரையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவு செய்து கொள்ளுமாறு அரச அதிபர் கோரி உள்ளார். (இ-162)

## புதியஆளுநருக்கு ஜெயலலிதா வாழ்த்து

சென்னை, மே 27

தமிழகத்தின் புதிய ஆளுநரான டாக்டர் எம் சென்னா ரெட்டிக்கு முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பிவைத்தார்.

புதிய ஆளுநருக்கும் தமது அமைச்சரவைக்கும் இடையே மகிழத்தக்க உறவு இருக்கும் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் செல்வி ஜெயலலிதா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். [உ-எ]


## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பொது முகாமையாளர் பதவி

சம்பளம் 1305/- — 60×4 — 75×11 — 2370/

வயதெல்லை 30 — 45 வரை

பிணை ரொக்கம் ரூபா 10,000/-
ஆதனம் 25,000/-

முடிவு திகதி 16 — 06 — 1993

கல்வித் தகைமை கூட்டுறவு வேலை ஆணைக்குழு சுற்றுநிருபம் இல. 108 / 81 இன் பொது முகாமையாளர் 101 / 6 இற்குக் கோரப்பட்ட தகைமைகள்

குறிப்பு கல்வித் தகைமை ஏனைய விவரங்கள் சங்கப் பணிமனையில் அறியலாம்.

அனுப்ப வேண்டிய விலாசம்:

தலைவர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-5168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை ...
மா ... கராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பட்டதாரி ஊழியர் பதவி உயர்வு பெறுவதற்கு பல்வேறு சலுகைகள்

கொழும்பு, மே 27

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுவினைஞர் மற்றும் அதனையொத்த சேவைகளில் உள்ள பட்டதாரி ஊழியர்கள் உயர் பதவிகளுக்கான தேர்வுகளில் தோற்றுவதற்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய பட்டதாரி ஊழியர்களுக்கு பதவி உயர்வுகளின் போதும், ஆட்சேர்ப்புகளின் போதும் சலுகைகள் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. பட்டம் ஓர் அடிப்படைத் தகுதியாகவுள்ள பதவிகளை வகிப்பதற்கு மேற்படி ஊழியர்கள் இனிமேல் புதிய சலுகைகளை பயன்படுத்த முடியும்.

இது தொடர்பாக அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் பொதுநிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிருபங்களை அனுப்பி வைத்துள்ளது.

அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் வருமாறு:-

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கடல் கடந்த சேவை, தொழில் அலுவலர் சேவை, சுங்க சேவை, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சேவை ஆகியவற்றிற்கு ஆட்சேர்க்கும்போது அரசாங்க சேவையில் பதவிநிலை அல்லாத தரங்களில் கடமையாற்றும் பட்டதாரிகளும் விண்ணப்பிப்பதற்கு வசதியாக வயதெல்லை நீக்கப்படும்.

ஆட்சேர்ப்புத் தேர்வுகளுக்குத் தோற்ற இத்தகைய பட்டதாரி ஊழியர்கள் எவ்வித நிபந்தனைகளுமின்றி அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் தற்போது பட்டதாரி ஊழியர்கள் பெறுகின்ற வேதனம், சலுகைகளில் எதுவித மாற்றமும் இன்றி அவர்கள் பதவி வழங்கும் திட்டத்தினுள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். (ஒ-6)

## கல்வித்துறையில மாற்றம் வரும்
# வட்டாரக் கல்வி அதிகாரி முறை மீண்டும் அறிமுகம்

கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்றும்—

வட்டாரக் கல்வி அதிகாரி கல்வி முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வட்டாரக் கல்வி அதிகாரிகள், பாடசாலை நிர்வாகம், மேற்பார்வை ஆகியவற்றைக் கவனிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## தேர்தலை அடுத்து செய்யப்பட்ட
# பொலிஸ் இடமாற்றங்கள்; ஜனாதிபதி டி.பி. ரத்து

கொழும்பு, மே 27

மாகாணசபைத் தேர்தலை அடுத்து செய்யப்பட்ட பொலிஸ் இடமாற்றங்கள் அனைத்தையும் ஜனாதிபதி விஜேதுங்கா ரத்துச் செய்து விட்டார்.

பொலிஸ் இடமாற்றங்களை மேற்கொள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இம்மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்ட பொலீஸார் அனைவரும் பழைய இடங்களிலேயே தொடர்ந்து சேவையாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வீரப்பனின் ஆட்கள் மூவர் மோதலின் போது பலியாம்

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனின் கும்பலைச் சேர்ந்த மூவரை தமிழகப் பொலீஸார் ஒரு மோதலின் போது சுட்டுக்கொன்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் வீரப்பனைப் பிடிக்கும் பணி முக்கிய கட்டத்தை அடைந்துள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அம்மோதலைத் தொடர்ந்து வீரப்பன் கும்பலிடம் இருந்து அறு நூறு கிலோ வெடிமருந்து, நிலக்கண்ணி மற்றும் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## மலேரியா தாக்கம் குறைந்தது
# கடந்த மாதம் 1,189 பேர் மட்டுமே நோயினால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரிகள் பகுதிகளிலும் கடந்த மாதம் (ஏப்ரல்) ஆயிரத்து 189 பேர் மட்டுமே மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 135 பேர் மூளை மலேரியாவினாலும் ஆயிரத்து 51 பேர் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டும் 503 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 37 பேர் மூளை மலேரியாவினாலும் எஞ்சிய 466 பேரும் சாதாரண மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நடந்து முடிந்துள்ள காலாண்டு காலப் பகுதியில் சென்ற மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் மலேரியாவின் தாக்கம் குறைந்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# ஆச்சிரமத்தில் பெந்தேகொஸ்து செபவிழா

பெந்தேகொஸ்து செபவிழா இன்று 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மூன்று தினங்கள், மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இந்த மூன்று தினங்களும் காலை 7 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் விழா ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நற்செய்திக் கூட்டத்துடன் முடிவடையும். (இ)

## கண்காட்சியை மக்கள் பார்வையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தினால் நடத்தப்பட்டுவரும் விஞ்ஞானக் கண்காட்சியை இன்றும், நாளையும் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்று வரும் இக்கண்காட்சியைப் பார்வையிட குடாநாட்டின் பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் பெருமளவில் கூடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

## சித்திர கண்காட்சி

குருநகர், மே 27

யாழ். திருமறைக்கலாமன்றத்தின் கவின் கலைகள் பயிலக சித்திரப் பகுதி ஒழுங்கு செய்துள்ள மாபெரும் இரு நாள் சித்திரக் கண்காட்சி நாளை வெள்ளி காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) திரு. வை. சிவசுப்பிரமணியம் (ரமணி) கண்காட்சியை திறந்து வைப்பார்.

இரு நாட்களும் காலை 9 மணிமுதல் மாலை 5-00மணி வரைகண்காட்சி நடைபெறும். (ஒ-...)


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 — 11 — 1971

உதிர்வு: 07 — 06 — 1992

## செல்வி மதிவதனா தம்பு

ஓர் ஆண்டு முடிந்ததம்மா உந்தன் உருவம் கண்டு ஒளித் திங்கள் போலே எம் உணர்வில் நீ இருந்தாய் அம்மா!

பாழா நோய் உன்னை அடிதுடிக்க வைத்தம்மா! பிரிவுத் துயர் தாளவில்லை பிரிந்து சென்றுவிட்டாய் அம்மா!

எரியும் தணலானாய் ஏக்கந்துயர் தந்தாய் அம்மா!
உந்தன் புன்சிரிப்பும் இனிய பேச்சும்
உறக்கத்திலும் எம்முன்னே தோன்றிட
எங்கு சென்றாய் அம்மா செல்வமே மதி
எங்கள் இதயத் தடாகத்திலே -
என்றும் இணைந்திருப்பாய்.

உனது உயிர்பிரிவால் வாடும்:
தந்தை, தாய், உடன்பிறப்புக்கள், மைத்துனர்கள், உறவினர்கள்.

கராச் லேன்,
சண்டிலிப்பாய்.

(25835)



# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 02 — 1966

மறைவு: 27 — 05 — 1987

## அழகையா பிறேமகுலசிங்கம்
(பிறை)

ஒளி வீசிய எங்கள் வாழ்வில் - இன்று
இருள் சூழ்ந்து ஆறு ஆண்டுகள் ஆனதையா
அன்று வீசிய உனது அன்பலைகள்
இன்று நினைவலைகளாக நிழலாடுகின்றது.

உனது ஆத்மா சாந்தி! சாந்தி!!

அழகையா குடும்பத்தினர்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

(25814)



# 45ஆம் நாள் நினைவஞ்சலி
(27-05-1993)



தூல முகிழ்ப்பு: 13 — 04 — 1907

தூல அவிழ்ப்பு: 13 — 04 — 1993

திருமதி
## தில்லையம்பலம் அன்னபூரணம்
(புங்குடுதீவு - 10)

13-04-93இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு திருமதி தில்லையம்பலம் அன்னபூரணம் அவர்களது 45ஆம் நாள் நினைவஞ்சலித் தினம் எமது இல்லத்தில் இன்று (27-05-93) வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழ சமுகமளித்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

வணக்கம்.

அமரரின் குடும்பத்தினர் சார்பில்;
தி. இரத்தினம் குடும்பத்தினர்.

இல. 06,
இலங்கை பெந்திகோஸ்தே முன்னால்,
சசீந்திரன் (வன்னி) வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(25836)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1 கிலோ ஜாவா கொய்யா மற்றும் பழ, பூ வகை கன்று களும் விற்பனைக்குண்டு. Old No. 204, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
(25824)

பாவித்த Easten Sport சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சென். யூட்ஸ், 382C மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி), யாழ்ப்பாணம்.
(25828)

## தவறிவிட்டது

வே. ஜெயகுமாரி ஆகிய நான் மானிப்பாய் ஊடாக சங்கானைக்கு செல்லும் வழியில் இல. 706010807 உடைய அடையாள அட்டை சிறிய கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: V. குணபாலசிங்கம், தேவாலய வீதி, சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(5935)

ஜெனிதா செல்வராஜா ஆகிய நான் சுன்னாகம் பிரதான வீதியூடாக செல்லுகையில் இல. 718541107V உடைய அடையாள அட்டையும், வேறுசில பத்திரங்களும் அடங்கிய சிறு கைப்பை தவறிவிட்டது தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்: யோகா ஸ்ருடியோ & வீடியோ, (உதயன் பணிமனை அருகில்) கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
(5936)

25-05-93 காலையில் கிளாலிக் கடற்கரையில் கொழும்பிலிருந்து கொண்டுவந்த பெறுமதிமிக்க உடுபிடைவைகள் புகைப்படங்கள் மூக்கிய கடிதங்கள் அடங்கிய எனது பிரயாணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி லோசநாதபிள்ளை, 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(25822)

## கண்டெடுக்கப்பட்டது

சிறு தொகைப் பணம் எமது ஸ்தாபனத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம். றஞ்சனாஸ் பிடவை மாளிகை, இல. 17 – 18, நவீனசந்தை, யாழ்ப்பாணம், (25816)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## சீயாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது. பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சீயாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(25333)

## இலவச திருமண சேவை

31 வயது, கார்த்திகை, கனடா மணமகனுக்கு இலங்கைத் திருமணத்துக்கும், 26 வயது மிருகசீரிடம், உள்ளூர் மணப்பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். இலவச திருமண சேவை, து. விமலா, நாச்சிமார். கோவிலடி. (25829)

# கண்ணீர் அஞ்சலி

கொழும்பில் 23 - 05 - 93 இல் அகாலமரணமான இராஜகோபால் 'பிறேம்ஆனந்'திற்கு எனது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றேன்,

நண்பன்:
மாணிக்கம் ஜெகநாதன்.

298, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (25832)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 | 27 |
| 04 | 05 |
| 1930 | 1987 |

## அமரர் அருளம்பலம் முத்துராஜா

(முன்னாள் உபதபாலதிபர், தொண்டமானாறு)


திதி: 21 — 05 — 1993

மூவிரண்டு ஆண்டானாலும் நின் திருவுருவம் எங்கள் நெஞ்சை விட்டகலாது, உங்கள் நினைவலைகள் எம் மனதில் கண் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா ஈடேற்றம் பெற பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் மறைவால் வாடும்;
மனைவியும், பிள்ளைகளும்.

செருடாவில்,
தொண்டமானாறு. (25792)

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22 | 27 |
| 08 | 05 |
| 1946 | 1984 |

## அமரர் கந்தப்பு ஸ்ரீபன் தேவராஜா

'சீவியத்தில் நேசித்தவரை
மரணத்திலும் மறவோம்''

மனைவி, மக்கள்.

இல: 7. கற்குழி ஒழுங்கை.
சாவகச்சேரி. (6171)

# A/L 95

பிரிவு - II

ஆரம்பம்:
29 - 05 - 1993

பொருளியல் — மகேந்திரன்
கணக்கியல் — SAM
வர்த்தகம் — தேவா, குகன்
அளவையியல் — சோதிலிங்கம்
புவியியல் — சண்
வரலாறு — நாகராணி
அரசியல் — கியூபேட்
தமிழ் — குழந்தை
இந்துநாகரிகம், இந்து சமயம் — அருள்நங்கை
கிறிஸ்தவம் — அருட்சகோதரர்

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-4773)

வட இலங்கை சுதேசிய வைத்திய சபை

# விசேட பொதுக் கூட்டம்

சபையின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், லங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியின் அபிவிருத்தி சம்பந்தமாகவும் சபையின் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு 30-05-1993 காலை 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் சித்தாயுர்வேத அபிவிருத்தியில் அக்கறையுள்ளவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்,
வட இலங்கை சுதேச வைத்திய சபை.
(25833)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி தம்பிராஜா கிருஷ்ணகுமாரி (ரதி)

காரைநகர் வேம்படியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் EV ஆறுமுகம் தம்பிராஜா திலகவதி தம்பதிகளின் மகளுமாகிய கிருஷ்ணகுமாரி 21 – 05 - 93இல் கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் உதயகுமார் (கனடா). உதயகுமாரி (ஜேர்மனி), வசந்தகுமாரி (கனடா), ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), சாந்தகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (கனடா), ஒப்பிலாமணி (ஜேர்மனி). ஹரேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஷங்கரியின் சித்தியும், பிரதீப், கார்த்திகா (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
34/18 வளாக ஒழுங்கை, ஆ. திருவாதுரை
திருநெல்வேலி. (25834) (சித்தப்பா)

## இராஜகோபால் பிறேம்ஆனந்

மட்டக்களப்பு ஒந்தாச்சி மடத்தைப் பிறப்பிடமாகவும் 81, காரைக்காட்டு வீதி வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட இராஜகோபால் பிறேம்ஆனந் 23 – 05 - 1993இல் கொழும்பில் அகாலமரணமானார்.

இவர் இராஜகோபால் நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், தேவகலா, தேவராஜன், பிறேம் ஆனந்தி, தர்மினி, றங்கராஜன், கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் 26-05-1993இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. சிட்டிபாலா
81, காரைக்காட்டு வீதி, (மைத்துனர்)
நாச்சிமார் கோவிலடி. [25831)

## இராசம்மா சின்னத்தம்பி

கரணவாய் தெற்கைச் சேர்ந்த இராசம்மா சின்னத்தம்பி 26-05-1993 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வி. சின்னத்தம்பி (முன்னாள் இலங்கைப் புகையிரதப் பகுதியின் பிரதம பாதுகாவலர்) யின் அருமை மனைவியும், யோகேஸ்வரி கந்தசாமி (ஆசிரிய ஆலோசகர், வடமாராட்சிக் கோட்டம்), தெய்வேந்திரன் (லண்டன்), யோகேஸ்வரன் (டென்மார்க்), இராஜேஸ்வரன் (மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்), புஸ்பராஜா (டென்மார்க்), இராசமலர் தவராஜா (கனடா), செல்வச்சந்திரன் (லண்டன்), கருணாகரன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிக்க தாயும், கந்தசாமி (தபால் அதிபர் V.V.T.), ஜெசிக்கா செல்வேந்திரன் (லண்டன்), கனகேஸ்வரி யோகேஸ்வரன் (டென்மார்க்), சிவராஜினி இராஜேஸ்வரன் (ஆசிரியை, வேதாரணியேஸ்வர வித்தி.), தவராஜா (கணக்காளர்-கனடா), ஜெயந்தி புஸ்பராஜா (டென்மார்க்), பாமதி செல்வச்சந்திரன் (லண்டன்), பிரமிளா கருணாகரன் ஆகியோரின் அருமை மாமியும், ஜெயானந்தகுமார் (ஆசிரியர் - புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தி.), ரவீந்திரன் (கனடா), சுபத்திரா ஜெயானந்தகுமார் (ஆசிரியை வடமராட்சி ம. ம. கல்லூரி), ஜெயகௌரி ரவீந்திரன் (கனடா), சுதர்சனன் (கனடா), ஜெயரூபுன் (கனடா), அனோஜன் - ஆரணன் (கனடா), கர்ஷினி-துஷானி (லண்டன்), நிரோஜன் - நிஷோபா (டென்மார்க்), நிதர்சன், விதூஷன், டிலானி (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26 – 05 – 1993) புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யோகஸ்தான் கரணவாய் தெற்கு, கரவெட்டியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி யோகேஸ்வரி கந்தசாமி,
''யோகஸ்தான்'', திரு. சி. ராஜேஸ்வரன்.
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (25830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்



## உதயன்

### கெடுகுடியின் புதிய வாரிசு

கெடுகுடி சொற்கேளாது என்பது முதுமொழி அந்த முதுமொழியை முழுதாக உண்மையாக்கி வருபவர்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத் தலைவர்கள். இது விடயத்தில் ஒருவர் இருவரைப் பெயர்சொல்லிக் குறிப்பிடுவதற்கில்லை. ஆட்சியில் இருந்த, ஆட்சியிலிருக்கும் அரசியல் தலைவர்கள் அத்தனை பேருமே அந்த வரிசையில் சேர்க்கப்படவேண்டியவர்களே. ஆகப்பிந்தி இளவயதுப் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கா இந்தப் பட்டியலில் சேர்கிறார். கெடுகுடியின் புதிய வாரிசாகிறார் அவர்.

இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வுத்திட்டம் அடுத்த வருட இறுதியில் தயாராகிவிடும் என்று அவர் வெகு 'புத்திசாலித்தனமாக'க் கூறியிருக்கிறார்!

இனப்பிரச்சினை சுமார் ஐம்பது வருடகாலமாக நீடித்து வருவது. இதனைத் தீர்ப்பதற்கு ஆட்சிக் கட்டில் ஏறும் தலைவர்கள் ஒவ்வொருவரும் கால அட்டவணை நிர்ணயித்தார்களே அன்றி, அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மனதாரச் செயலாற்றியதில்லை. டி. எஸ். தொடக்கம் பிரேமதாசா வரை இதே கதைதான்!

இவ்வாறு காலத்தை வாங்குவதற்கு. இருதரப்புப் பேச்சு, பலதரப்புப் பேச்சு, வட்டமேசை மாநாடு, அரசியல் கட்சிகள் மாநாடு, அனைத்துக் கட்சிகள் மாநாடு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று புதிய புதிய மாற்று யுக்திகளைக் கையாண்டார்கள். அதே வழியையே இளம் பிரதமரும் பற்றிக் கொண்டுள்ளார்!

பிரேமதாசா அரசாங்கத்தில் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்தபோது, தெரிவுக் குழுவின் மூலம் விரைவில் தீர்வு வந்துவிடும் என்று கூறிய ரணில், மூன்று வார காலஇடைவெளியில் பிரதமர் ஆசனத்தில் அமர்ந்ததும் தீர்வு வெகுதூரத்தில் இருப்பதாக கால அட்டவணை கீறுகிறார்!

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தோல்வி அடைந்து விட்டது என்பதை புதிய பிரதமர் மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இனி அடுத்த ஆண்டு இறுதி வரையான தமது பதவிக் காலத்தை ஓட்டுவதற்கு புதியதொரு பாதுகாப்புக் கேடயத்தை அவரும், விஜேதுங்காவும் கண்டு பிடிக்கப் போகிறார்கள்! அதற்கான சமிக்ஞையே புதிய கால அட்டவணை

புதிய கேடயம் தமிழர் பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து ஆராயத் தொடங்கும். வழமையான சுற்றுச் சுற்றி கடைசிப் புள்ளியை அடையும்போது அதுவும் தோல்வியையே தொடும். இந்த வழமையான காலம் வாங்கும் தந்திரத்தையும் யுக்தியையும் கைவிடுமாறு எவர் புத்திமதி கூறினாலும் தெற்குத் தலைவர்கள், குறிப்பாக பதவியில் உள்ள தலைவர்கள் கேட்கப்போவதில்லை.

கெடுகுடி எப்படி நல்ல புத்திமதிக்குச் செவிசாய்க்கும்? நாட்டை சீரழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் ஆளும் வர்க்கத்தினரை தடுப்பது எப்படி? இங்கே செயற்பட வேண்டியவர்கள் சிங்களப் பொது மக்களே ஆவர். இனப்பிரச்சினையை இனியும் பதவியைக் காப்பாற்றும் காப்பரணாகக் கைக்கொள்ளாமல், நாட்டு நலன் கருதி அதனைத் தாமதம் இன்றித் தீர்க்குமாறு அவர்களே தமது தலைவர்களுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

# நவாஸ்ஷெரீப் பதவி நீக்கம் செல்லுபடி அற்றது

## பாக். உயர் நீதிமன்றம் தீர்ப்பு

மணிலா, மே 27

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசை ஜனாதிபதி குலாம் இசாக்கான் பதவி நீக்கம் செய்தது செல்லுபடியற்றது பிரதமர் நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசு மீண்டும் பதவியை ஏற்க வேண்டும் இப்படி பரபரப்பான தீர்ப்பு ஒன்றை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் நேற்று வெளியிட்டது.

கடந்த 21 தினங்களாக நடைபெற்ற விசாரணையின் முடிவில் நேற்று இந்த தீர்ப்பு வெளிவந்தது.

பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு ஊழல் மிக்கது என்றும்—

பொருளாதார முறைகேடுகளில் ஈடுபடுவதுடன் பழி தீர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்றும் — கூறி கடந்த ஏப்பிரல் 18 ஆம் திகதி ஜனாதிபதி குலாம் இஷாக் கான் பாகிஸ்தான் அரசையும், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தையும் கலைத்திருந்தார். புதிய தேர்தலுக்கும் உத்தரவிட்டார். இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆணை சட்டத்திற்குப் புறம்பானது, அரசமைப்புக்கு முரணானது என்று பதினொரு நீதிபதிகளைக் கொண்ட குழு நேற்று தீர்ப்புவழங்கி உள்ளது.

பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு ஆட்சியைத் தொடர வேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாக். நாடாளுமன்றம் நேற்றிரவு கூடும் என சபாநாயகர் அயூப் அறிவித்தார்.

இதேவேளை — நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பினைத் தொடர்ந்து எழுந்துள்ள அரசியல் நிலை குறித்து விவாதிக்க பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவர் பெனாசிர் பூட்டோ தமது கட்சியின் உயர் மட்டக் குழுவை அவசரமாகக் கூட்டியிருந்தார்

(இ-5)

## தீர்ப்பை ஏற்பதாக ஜனாதிபதி அறிவிப்பு

இஸ்லாமபாத், மே 27

பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி குலாம் இசாக்கான் தெரிவித்திருக்கிறார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட நவாஸ் ஷெரீப்பை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்தும் படியும்—

கலைக்கப்பட்ட பாகிஸ்தான் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றை மீண்டும் இயங்கச் செய்யும் படியும்—

பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஜனாதிபதி குலாம் இஷாக்கான் ஏற்றுக் கொண்டுள்ளார்.

(இ எ)

## பாடசாலைகளில்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் திருமதி ச. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்வார்.

(ஒ)

o o o

எழுதுமட்டுவாள் தெற்கு சீ. சீ. த. க. பாடசாலையின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. செ. நடராசா தலைமையில் நடைபெறும்.

(ஒ)

## விவேகானந்தர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 27

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ நிகழ்ச்சியை ஒட்டிய கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற உள்ளது

காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்குக்கு கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் தலைமை வகிப்பார். "சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்" குறித்து சுவாமி சித்ரூபானந்தா ஆய்வுரை நிகழ்த்துவார்.

கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் உயர்தர மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ)

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" நிறுவனத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.00 மணி:- கிறாஸ் கொப்பர்ஸ் பச்சை அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வெள்ளை அணி

★ பிற்பகல் 3.45 மணி:- யாழ். பல்கலைக்கழக நீல அணி எதிர் ஷப்றா அணி

★ யாழ். பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் இளம் அணி

o o o

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ புங்குடுதீவு அம்பாள் வி. க. "பி" அணி எதிர் திருமலை நட்சத்திரங்கள் அணி

★ புங்குடுதீவு அம்பாள் வி. க. "பி" அணி எதிர் பொம்மர்ஸ் வி. க. அணி

o o o

யாழ் கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. பங்குபற்றவிருக்கும் பாடசாலை அணிகள் வருமாறு:-

★ ஹாட்லிக் கல்லூரி அணி எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

★ சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் மட்டுவில் ம.ம.வி.

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு — ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நிலைய மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ பிற்பகல் 2 45 மணி: — நல்லூர் ஸ்புட்னிக் வி க. அணி எதிர் அறிவொளி வி.க. அணி

★ பிற்பகல் 3.30 மணி:— அரியாலை ஐக்கிய வி க. "பி" அணி எதிர் நீர்வேலி ஐ. வி.க. "பி" அணி

★ மாலை 4. 30 மணி: — அரியாலை ஐ. வி. க. "ஸி" அணி எதிர் மைக்ஸ் ஜக்ஸன் வி. க அணி.

### கடந்த ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

துன்ளமை, யாழ். மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கத்தினர் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஜனவரியில் 3 ஆயிரத்து 98 பேரும், பெப்ரவரியில் ஆயிரத்து 311 பேரும், மார்ச்சில் ஆயிரத்து 824 பேரும் மலேரியா நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-162)

## "சுற்றுலா" செய்த தபால்கள் கொழும்பு சேர்ந்து விட்டன!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கென அனுப்பப்பட்டு குமண கப்பலில் "சுற்றுலா" செய்த தபாற் பொதிகள் ஒருவாறு கொழும்பு சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இறக்கப்படாமல் யாழ்ப்பாணம் திரும்பி வந்த அந்தத் தபால் பொதிகளை யாழ் பிரதம தபாலதிபர் செவ்வை பார்த்து திருகோணமலை பிரதம தபால் அதிபருக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அந்தப் பொதிகள் திருகோணமலையிலிருந்து தரை மார்க்கமாகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பிரஸ்தாப பொதிகள் கொழும்பைச் சென்றடைந்துவிட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாய வாகன வெள்ளோட்டம் நடைபெறும். (க)

o o o

யாழ். வண்ணை சிவன் கோவில் அக்னி நாள் விசேட அபிசேகம் தொடர்பாக இன்று காலை ஏழு தொடக்கம் ஏகதின லட்சார்ச்சனை நடைபெறும். நாளை சங்காபிசேகம் இடம்பெறும் பி. ப. 4 மணிக்கு பண்டிதர் த. பொன்னம்பலவாணர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)

## தீக்குளிப்பு

கொழும்புத்துறை, மே 27

யாழ். புங்கன்குளம் வில்வையடி அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

மாலை ஆறு மணிக்குப் பொங்கல் வைபவமும், நாட்டில் அமைதி சமாதானம் சுபிட்சம் நிலவ வேண்டியும் மக்கள் நிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டியும் ஆலய முன்றலில் தீக்குளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

(அ)

## பரீட்சை மண்டபம் இடம் மாற்றம்

பயிற்சி ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பரீட்சை, சிற்றூழியர் தரம் மூன்றிற்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை எழுதுவதற்கனா பரீட்சை மண்டபம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து யாழ். இந்துக்கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளை இந்துக் கல்லூரி பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-162)

## நாளை

அச்சுவேலி மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா பிரதமவிருந்தினராக கலந்துகொள்கின்றார்.

(க-11)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 2. 30 மணிக்கு பிரபல பாடகி ஊரிக்காடு சங்கீதரத்தினம் திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளையின் இன்னிசை விருந்து இடம்பெறும். [க]

★ ★ ★

யாழ். இந்துக் கல்லூரி வர்த்தகர் மாணவர் ஒன்றியம், நாளை காலை 9 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் "வரவு" மலரை வெளியிட்டு வைக்க உள்ளது.

பிரதம விருந்தினராக மக்கள் வங்கி பிராந்திய உதவி முகாமையார் திரு. வை. சிறிபத்மநாதன் கலந்துகொண்டு உரையாற்றுவார். அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் வெளியீட்டுரை நிகழ்த்துவார். (ஒ)

★ ★ ★

தென்மராட்சி, மே 27

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் ஆங்கிலதினம் நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை அரங்கில் அதிபர் வ. கைலேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டு நிபுணரின் சாட்சியமின்றி விசாரணை நடத்துவதில் பயனில்லை

## லாலி கொப்பேகடுவவின் சட்டத்தரணி வாதம்

லண்டன், மே 27

பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் ஜே. ஆர். வைற்றின் சாட்சியம் இன்றி கொப்பேகடுவ கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதில் எதுவித அர்த்தமும் இல்லை.

டென்சில் கொப்பேகடுவவின் குடும்பத்தின் சார்பில் வாதிடும் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரியா அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய அழைக்கப்பட்டுள்ள காமன்வெல்த் நாடுகளின் நீதிபதிகளைக்கொண்ட ஆணைக்குழு முன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணத்துக்குக் காரணமான அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம் குறித்து பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் திரு. ஜே. ஆர். வைற் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையை இணைத்து திருமதி லாலி கொப்பேகடுவ மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

உண்மையான விவரங்களை கண்டறிவதற்கு சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு அதில் அவர் ஜனாதிபதியைக் கேட்டிருந்தார்

அதன்படி சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணையை மேற்கொள்ள அந்தக் குழு தற்சமயம் இலங்கை வந்து விசாரணையை ஆரம்பித்துள்ளது.

ஆனால் வெடிகுண்டு நிபுணா திரு. வைற்றை இங்கு அழைப்பது பற்றி எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. அதுபற்றி சட்டமா அதிபருக்கோ, திருமதி லாலி கொப்பேகடுவவிற்கோ, சட்டத்தரணிகளுக்கோ எதுவித தகவலும் தரப்படவில்லை.

''இந் நிலையில் சர்வதேச ஆணைக் குழு தனது விசாரணையை தொடக்கியுள்ளது.

''திரு. வைற் இங்கு அழைக்கப்படாவிட்டால் இந்த விசாரணைக்குழுவினால் எந்தப் பயனும் ஏற்படாதுபோகும்.

''திரு. ஜே ஆர். வைற் தற்சமயம் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருப்பதால் அவர் இருக்கும் இடம்பற்றி தகவல் பெறுதல் கடினமாயுள்ளது.

''அவரை இங்கு அழைப்பது தோல்வியுற்றால் விசாரணைக் குழுவை நியமித்தன் பிரதானநோக்கம் நிறைவேறாமல் போய்விடும்—

இவ்வாறு சட்டத்தரணி அபயசூரிய மேலும் அங்கு தெரிவித்துள்ளார்.

(இ-5 6)

## விடுதலை புலிகள் வெளிவந்தது

யாழ்ப்பாணம், மே 27

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் மே மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

(இ-5)

### ஆசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம் குறித்து விதிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது பயிலுநர் ஆசிரியருக்கும் இச் சலுகை கிடைக்கும்.

★ 16 - 08 - 1992 முதல் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனத்தை ஊர்ஜிதப் படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டிலும் இவ்வாண்டிலும் நியமிக்கப்பட்ட ஆறாயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தர பட்டதாரி ஆசிரியர் சேவையில் சேர்க்கப் படுவார்கள்.

01-06-1993 க்குப் பின்னர் இவர்கள் ஒரு வருட கால சேவையை பூர்த்தி செய்ய வேண்டும்.

சேவைக் காலத்தின் போது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இரண்டாயிரம் ஆசிரியர்களும் நிரந்தர பட்டதாரி ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களும் பட்டப் படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

★ பதில் பாடசாலை அதிபர்களும் பதில் அதிபர்களும் அதிபரின் கடமையைச் செய்யும் ஆசிரியர்களும் அடுத்த மாதம் முதலாம் திகதி ஒரு வருட சேவையை திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருந்தால் அவர்களும் அந்தப் பதவிகளில் ஊர்ஜிதப் படுத்தப்படுவார்கள்.

இந்த நிவாரணங்களை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

(மற்றும் ஒரு செய்தி மூன்றாம் பக்கத்தில்) (இ-எ)

### "சுற்றுலா"...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக இப்போது தகவல் கிடைத்திருக்கிறது. இந்தத் தபாற் பொதிகளில் வெளி மாவட்டங்களுக்கும் வெளி நாடுகளுக்குமான கடிதங்கள் அடங்கியிருந்தன.

இம்மாதம் 22 ஆம் திகதி காலை 8 மணி வரை யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட வெளிமாவட்டக் கடிதங்களும் திருமலைக்குக் கப்பலில் அனுப்பப்பட்டு, அங்கிருந்து கொழும்பில் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதாகத் தகவல் கிடைத்திருப்பதாக யாழ். பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். [அ]

## நாடாளுமன்றத்துக்குள் நுழைய ஹெலி - படகுகள் உதவியை நாடிய எம்.பிக்கள்!

பொன் மே 27

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் விதிகள் குறித்து விவாதிக்க ஜேர்மன் நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது ஜேர்மனியில் வாழும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினர்

விவாதத்தில் கலந்து கொள்ள வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டக் காரர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஹெலிக்கொப்டர் மூலமும், றைன் நதியில் படகுகள் மூலமும் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## பிரேமா படுகொலை 13 பேர் தடுத்து வைப்பு

கொழும்பு, மே 27

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச படுகொலைச் சம்பவம் தொடர்பாக 13பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு கூறினார்.

இக்கொலை பற்றி இரகசியப் பொலீஸ் திணைக்களம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட இடம் நீதிவானின் உத்தரவின் மீதுதான் துப்புரவு செய்யப்பட்டது என்று சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு ஜயசூரியா, வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(இ-எ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 27

சங்கீத, நடன ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 9 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

### 2 தேசத்துரோகிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- அதற்குரிய மகஸின் - 05
- மகஸின் தாங்கி - 01
- ரீ 81 துப்பாக்கி - 01
- அதற்குரிய மகஸின் - 05
- மகஸின் தாங்கி - 01
- தொலைத் தொடர்பு சாதனம் - 01
- அதற்குரிய அன்ரனா - 01
- கிரனைட் - 01
- நடுத்தர ரவைகள் - 74
- நேட்டோ ரவை - 79

இச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### இரு நாட்டு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை.

ஏன் அவ்வாறு செய்யமுடியவில்லை?

அப்படியிருந்தும் இந்திய, இலங்கை இராணுவங்களின் உள் நோக்கங்களில் எவரும் சந்தேகப்படவில்லை.

இரண்டு நாடுகளின் இராணுவங்களினால் நிறைவேற்ற முடியாத ஒரு பணியை மிகக் குறைந்த வசதிகளுடைய தமிழ்நாடு பொலீஸார் பெருமளவில் நிறைவேற்றி உள்ளார்கள் —

இவ்வாறு ஜெயலலிதா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழக சிறையில் இருந்து மூன்றாவது முறையாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் தப்பி இருப்பதாகவும் —

இதனால் தமிழக அரசின் நோக்கங்கள் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாகவும் —

உள்துறை அமைச்சர் சவான் கூறியதாக பத்திரிகைகளில் வெளியான செய்திக்கு முதலமைச்சர் தமது கடிதத்தில் விரிவாகப் பதிலளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

### இரு முதலமைச்சர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்தே புதிய முதலமைச்சர்களின் பணியை இடைநிறுத்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. ஆளுநர்கள் இருவர் மீதும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது

தென் மாகாண முதலமைச்சராக திரு. எம். எஸ். அமரசிறியை ஆளுநர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார் நியமித்ததை எதிர்த்து தென்மாகாண சபை உறுப்பினர் அமரசிறி தொடங் கொடவும்—

வடமேல் மாகவண முதலமைச்சராக திரு. காமினி ஜெயவிக்கிரமாவை ஆளுநர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா நியமித்ததை எதிர்த்து, மாகாண சபை உறுப்பினர் ஜி. எம். பிரேமச்சந்திராவும்—

தாக்கல் செய்த மனுக்கள் மீதே மேல் நீதி மன்றம் முதலமைச்சர்கள் மீதும் ஆளுநர்கள் மீதும் நோட்டீஸ் உத்தரவுகளைப் பிறப்பித்தது. மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

நீதியரசர்கள் சரத். என் சில்வா, அமீர் இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எச் எல். டி. சில்வாவும பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எல் சி. செனவிரத்னாவும் ஆஜராகினர்.

மனுதாரர்கள் கோரிய படி இடைக்கால நிவாரணம் வழங்க மறுத்த மேன் முறையீட்டு நீதிமன்றம் முதலில் பிரதிவாதிகள் மீது நோட்டீஸ் பிறப்பிக்க உடன்பட்டது.

அதன்படி, முதலமைச்சர்கள் செயல்படுவதைக் கட்டுப்படுத்தும் நோட்டீஸைப் பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இம் மனுக்கள் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தது.

இதேவேளை — விசாரணை முடிவடையும் வரை, பிரதிவாதிகளான முதலமைச்சர்கள் தங்கள் சபைகளுக்கு அமைச்சர்களை நியமிக்கக் கூடாது என்றும் மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

(அ-எ-6)

## மரண அறிவித்தல்கள்

செல்வி

### தம்பிராஜா கிருஷ்ணகுமாரி

(ரதி)

காரைநகர் வேப்படியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தம்பிராஜா - திலகவதியின் (பெரியதங்கச்சி) மகளுமான செல்வி கிருஷ்ணகுமாரி 21-05-93 இல் கனடாவில் அகால மரணமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற சி. ம கதிரவேலு - செல்லம்மா தம்பதியினரின் அருமை பேர்த்தியும், பாலசுப்பிரமணியம் - பத்மாவதி (கனடா), மார்க்கண்டு - உமாதேவி (கொழும்பு), குணசேகரம் சிவஞானம், சிவகுமாரன் லோகநாயகி (கனடா) ஆகியோரின் பெறாமகளும், ஓம்சக்தி, சர்வேஸ்வரி, சின்னன், தில்லை நடராசா (வவுனியா), திருச்சிற்றம்பலம் (வவுனியா), காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை, தியாகராசா ஆகியோரின் அருமை மருமகளும், உதயகுமார், ராசாத்தி, ராணி, ரஜனி, ரஞ்சா, விஜயா, மோகன், அப்பு, சிவராஜா, அப்பன், விக்கினராஜா, ராதா, ராகினி, சுதாகரன், வதனா, ஜெயா, ஜெயானு ஆகியோரின் சகோதரியும், தவராஜா, மகாராஜா, கீதா, உமா, சிவா, மாலினி, கோபி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. ஞானம்
(சின்னம்மா)

85, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(25841)

### சின்னத்துரை செல்லத்துரை

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திரு. சி. செல்லத்துரை 26 - 05 - 93 காலமாகிவிட்டார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, கமலானந்தன் நீர்பாசனத் திணைக்களம் - முருகண்டி), சற்குணநாதன் (ஜேர்மனி), அற்புதநாதன் ஜேர்மனி), கமலேஸ்வரி, கருணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நவநீதராசா (பிரான்ஸ்), மாலா, பத்மநாதன் (கோப்பாய் ப. நோ. கூ. சங்கம்), பாக்கியலிங்கம் (போதனா வைத்திய சாலை), வசந்தகுமாரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனாரும் தியாகராசாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
சி. பாக்கியலிங்கம்
(மருமகன்)

மட்டுவில் தெற்கு.

(25842)

மேலும்மரண அறிவித்தல்கள் 4ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org